*கவனிக்க.-* 07.08.2025 ஆம் திகதிய 2449 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV(ஆ) (தமிழ் மொழி) மூலம் பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2450 - 2025 අගෝස්තු මස 15 වැනි සිකුරාදා - 2025.08.15**

2450 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 704 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 706 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 706 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, ஓகத்து மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

**தென் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு**

ஹக்மன பிரதேச சபையில் வெற்றிடமாக உள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள தென் மாகாணத்துக்குள் நிரந்தர வசிப்பிடம் உடைய இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| பதவியின் பெயர் | - | சாரதி (நாளாந்த அடிப்படை) |
| பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | - | 01 |
| தொழிலின் தன்மை | - | 2025.12.31 ஆந் திகதி வரை மாத்திரம் நாளாந்த அடிப்படையில் சம்பளம் வழங்கும் அடிப்படையின் கீழ் பதிவு செய்யப்பட்டு சேவை பெற்றுக் கொள்ளப்படும். அதற்குப் பின் சேவை நீடிப்பு செய்யப்பட மாட்டாது. |
| சம்பளக் குறியீடு | - | PL3 - 2025 |
| சம்பளத் திட்டம் | - | ரூபா 42,780.00 - 10x490 - 10x540 - 10x590 - 12x630 - ரூபா 66,540.00 |

**01. ஆட்சேர்ப்பு செய்வதற்கான ஆகக் குறைந்த கல்வித் தகைமைகள் மற்றும் வேறு தகைமைகள் :**

1.1 இரண்டு தடவைகளுக்குக் குறையாத தடவைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் ஏதேனும் 06 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

1.2 மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களை செலுத்துவதற்கான அனுமதிப் பத்திரம் மற்றும் தேர்ச்சிக்கான சான்றிதழைப் பெற்று இருத்தல்.

**02. வயது எல்லை :** விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு 18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் 45 வயதை விடக் கூடாதவர்களாக இருத்தல் வேண்டும்.

**03. ஆட்சேர்ப்புச் செய்வதற்கான பொது நிபந்தனைகள் :**

3.1 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

3.2 விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான 05 வருட காலம் (தொடர்ச்சியாக 03 ஆண்டுகள்) தென் மாகாணத்துக்குள் நிரந்தர வசிப்பிடம் காணப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

3.3 சிறந்த நன்னடத்தை உடையவராகவும் மற்றும் சிறந்த உடல் ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

3.4 தண்டனைச் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் கருதப்பட்டு தண்டனை பெற்ற ஒருவராக அல்லது அரசாங்க அல்லது மாகாண பொதுச் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர் அல்லாது இருத்தல்.

3.5 தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் முறையான நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில் சார் நிபுணத்துவம் என்பவற்றை உறுதி செய்யும் ஒரு பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**04. சேவையில் இருத்துவதற்கான நிபந்தனைகள் :**

4.1 சேவை தேவைக்கு ஏற்ப ஹக்மன பிரதேச சபைக்குச் சொந்தமான கெப் வாகனம், டிராக்டர், லேண்ட் மாஸ்டர், நீர் பவுசர், கலி பவுசர், டிப்பர் வாகன கம்பக்டெர், போன்ற வாகனங்களில் கடமை புரிவதற்காக ஈடுபடுத்தப்படும்.

**05. விண்ணப்பிக்க வேண்டிய முறை**

5.1 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டு உள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்துக்கு அமைய A4 அளவினைக் கொண்ட கடதாசிகளில் விண்ணப்பப் பத்திரத்தைத் தயாரித்து 2025.08.22 ஆந் திகதிக்கு முன்னர் தலைவர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

5.2 விண்ணப்பப்பத்திரத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சாரதி பதவிக்காக" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

5.3 முழுமையற்ற, தெளிவற்ற விண்ணப்பப்பத்திரங்கள் மற்றும் உரிய திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தல்களும் இன்றி இரத்துச் செய்யப்படும்.

5.4 விண்ணப்பப்பத்திரத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டு உள்ள ஆவணங்களின் உறுதி செய்யப்பட்ட பிரதிகளை அனுப்புதல் வேண்டும்.

1. பிறப்புச் சான்றிதழ்
2. கல்விச் சான்றிதழ்கள் மற்றும் தேர்ச்சிக்கான சான்றிதழ்
3. வசிப்பிடத்தை நிரூபிப்பதற்கான கிராம அலுவலர் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டையின் நிழற்படப் பிரதி
5. சமீபத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ் 02

**06. விண்ணப்பம் கோரப்பட்ட பின்னர் அல்லது கோரப்படும் நேரத்தில் அல்லது ஆட்சேர்ப்பை தாமதப்படுத்தல் மற்றும் இந்த அறிவித்தலை திருத்துவதற்கான அதிகாரம் ஹக்மன பிரதேச சபையின் தலைவருக்கு உரியது.**

ஹக்மன பிரதேச சபை அலுவலகம்,
2025, ஓகத்து 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹக்மன பிரதேச சபையின் சாரதிப் பதவிக்கு நாளாந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................................................................
..........................................................................................................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் : .........................................................................................................
..........................................................................................................................................................................

03. தனிப்பட்ட முகவரி : ........................................................................................................................................
..........................................................................................................................................................................

04. பிறந்த திகதி : ஆண்டு : ............................................ மாதம் : ............................................ திகதி : .................................

05. பால் (ஆண்/ பெண்) : ...........................................................................................................................................

06. திருமணமானவர்/ திருமணமாகாதவர் : .......................................................................................................................

07. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ...................................................................................................................

08. தொலைபேசி இலக்கம் : .........................................................................................................................................

09. மாவட்டம் : ..........................................................................................................................................................

10. பிரதேச செயலாளர் பிரிவு : ...................................................................................................................................

11. சித்தி பெற்றுள்ள மிக உயர்ந்த தேர்ச்சி : ...................................................................................................................

12. தொழில் நுட்ப திறன்கள் : .......................................................................................................................................

13. தொழில் ரீதியான தகைமைகள் : ...............................................................................................................................

14. உங்கள் மீது நீதி மன்றத்தினால் ஏதேனும் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதா? : ............................................................
..........................................................................................................................................................................

15. அவ்வாறு எனில் தண்டனையின் சுபாவம்? : ..................................................................................................................

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் ஆகும் எனவும் இதன் மூலம் உறுதிப்படுத்துகிறேன். இங்கு என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என இப் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு முன்னர் அறிந்து கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் நான் அதற்குத் தகுதி அற்ற ஒருவராக கருதப்படும் என்பதையும், தெரிவு செய்யப்பட்ட பின் அறிந்து கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் சேவை நீக்கத்துக்கும் ஆளாவேன் எனவும் அறிவேன்.

........................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி ........................................

08 - 186

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## மாத்தளை பிரதேச சபை

### 1893 ஆம் ஆண்டின் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்ப்பைக் கோருதல்

மாத்தளை பிரதேச சபை 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 03 ஆந் திகதி அன்று நடைபெற்ற அதன் பொதுச்சபைக் கூட்டத்தில் 5.9 இலக்கத் தீர்மானத்தின் கீழ் பின்வரும் முன்மொழிவு நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எம். கே. எஸ். பீ. ஜயரத்ன,
தவிசாளர்,
மாத்தளை பிரதேச சபை,
பலாபத்வல.

பிரதேச சபை அலுவலகம்,
மாத்தளை,
2025, யூலை 20.

**தீர்மானம்**

1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மாத்தளை பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள் 2025 ஆம் ஆண்டில் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தை நடத்திச் செல்வதற்கெனப் பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப் பட்டுள்ளவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பில் எதிர்ப்புக்கள் கோரப்படுவதுடன், இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதாயின், உரிய காரணங்களை எழுத்து மூலம் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் இரண்டு பிரதிகளில் மாத்தளை பிரதேச சபையிடத்தில் தெரிவிக்குமாறு ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாத்தளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும்* | *மாட்டிறைச்சி விற்பனை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம்* | *இறைச்சி வகை* |
|---|---|---|
| எம். எம். பாயிஸ்,<br>இலக்கம் 18/D,<br>கெட்டவல,<br>மடவள உல்பத்த. | முஸ்லிம் பள்ளி எதிரில்,<br>கெட்டவல,<br>மடவள உல்பத்த. | மாடு |

08 - 157

# நானாவித அறிவித்தல்கள்

## மண்முனை மேற்கு பிரதேச சபை

### கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளை பிடிப்பதற்கான கட்டணம் அறவிடல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 8(1) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி மண்முனை மேற்கு பிரதேச சபையினால் 2025 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 17 ஆந் திகதிய 29/2025 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

த. கோபாலபிள்ளை,
தவிசாளர்,
மண்முனை மேற்கு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மண்முனை மேற்கு பிரதேச சபை,
வவுணதீவு,
2025, யூலை 28.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் உடைய 66 (1, 2, 3) ஆம் இலக்க பிரிவின் படி சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி மண்முனை மேற்கு பிரதேச சபையின் ஆள்புல எல்லைக்குள் கட்டாக்காலியாக சுற்றித்திரியும் மாடுகளை கட்டுப்படுத்தும் நோக்குடன் அந்த மாட்டின் உரிமையாளரிடம் இருந்து கீழ்க் குறிப்பிடப்படும் கட்டணங்களை விதித்து அறவிடுவதென மண்முனை மேற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

01. கட்டாக்காலி மாடு ஒன்றிற்கான உடன் அறவீட்டு கட்டணம் ரூபா 3000.00
02. கட்டாக்காலி மாடு ஒன்றிற்கான ஒரு நாள் பராமரிப்பு கட்டணம் ரூபா 1000.00
03. கட்டாக்காலி மாடு ஒன்றிற்கான பிடிப்பதற்கான கொடுப்பனவுக் கட்டணம் ரூபா 500.00

08 - 156/ 1

---

**மண்முனை மேற்கு பிரதேச சபை**

சேவைக் கட்டணம் அறவிடல் - 2025

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 8(1) இன் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி மண்முனை மேற்கு பிரதேச சபையினால் 2025 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 17 ஆந் திகதிய 09/2025 ஆம் இலக்க தீர்மானத்தின் பிரகாரம் கீழ்க் குறிப்பிடப்படும் விடயங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளமை இத்தால் பொதுமக்களுக்கு அறியத்தருகின்றேன்.

த. கோபாலபிள்ளை,
தவிசாளர்,
மண்முனை மேற்கு பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
மண்முனை மேற்கு பிரதேச சபை,
வவுணதீவு,
2025, யூலை 28.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் 2025, ஆம் ஆண்டில் பின்வரும் சேவைகளை வழங்குவது தொடர்பாக 2024.11.24 ஆந் திகதிய வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள் திருத்தம் செய்து பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை விதித்து அறவிடுவதென மண்முனை மேற்கு பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

**ஏனைய சேவைகள்**

01. ஆடு ஒன்று கொண்டு செல்வதற்கான கட்டணம் ரூபா 300.00
02. மாடு ஒன்று கொண்டு செல்வதற்கான கட்டணம் ரூபா 500.00
03. பிரதேச எல்லைக்குள் மணல் கொண்டு செல்லல் வீதிப் பயன்பாட்டு கட்டணம் கியுப் ஒன்றிற்கு ரூபா 300.00
04. பிரதேச எல்லைக்கு வெளியில் மணல் கொண்டு செல்லல் வீதிப் பயன்பாட்டு கட்டணம் கியுப் ஒன்றிற்கு ரூபா 500.00

08 - 156/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.